1982 மார்ச் 1]

அச்சுத் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கான தனி ஆலோசனைக் குழு

*வினா எண் 293—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சுத் தொழிலுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய, தனி ஆலோசனைக்குழு நிறுவ தமிழக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அச்சுத் தொழிலாளிக்கு 10—4—1978 தேதிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அரசு ஆணை 232-ல் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வூதியத்தை திருத்தி அமைக்க குறைந்த பட்ச ஊதிய ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இச் செயற் குறிப்பின் மீதான விவரங்கள் தொழிலாளர் நல ஆணையரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. விவரங்கள் கிடைத்ததும் அரசு குழு அமைப்பதற்கான முடிவுகளை எடுக்கும்.

(முற்பகல் 9-50)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், ஆலோசனைக் குழு நிறுவவேண்டும் என்று பல கோரிக்கைகள் அரசுக்கு வந்தது. ஆனால் அதன் அடிப்படையில் பரிசீலனை என்ற பெயரால் காலம் கடந்து கொண்டே போகிறது. எனவே உடனடியாக அரசு அந்த ஆலோசனைகளைப் பெற்று, சீக்கிரமாக குழு அமைத்து, சீக்கிரமாக அந்த குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயித்து அறிவிக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் வந்து அதன்பின்தான் இந்த அரசு செயல்படுவது என்று இல்லை. இந்த அரசு தாமாகவே செயல்படுகிறது. எல்லா குறைந்த பட்ச ஊதியங்களும் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, எது எதை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் என்று குழு அமைக்க சம்மந்தப்பட்டவர்களிடம் ஆலோசனை

கேட்டு குழு அமைத்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் அரசே உடனடியாக மாற்றியமைத்து வருகிறது. உதாரணமாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு 15—9—1979-ல் கூலி நிர்ணயம் செய்ததை இப்பொழுது மீண்டும் அரசே அதை மாற்றியமைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, அதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது. ஆகவே அரசே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு தாமாகவே பரிசீலனை செய்து முயற்சி எடுத்து வருகிறது. 1—5—1978-ல் அமுலில் இருந்த கூலியை மாற்றியமைக்க கமிஷனரிடம் விவரங்கள் கேட்டிருக்கிறோம். அது வந்தபிறகு, எவ்வளவு சீக்கிரத்தில் குழுவை அமைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் உடனடியாக அந்தக் குழுவை அரசு அமைக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அச்சுத் தொழில் சம்மந்தமாக, சமீபத்தில் கூட, குறைந்த பட்ச சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதால் அதை மாற்றியமைக்க பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டு திருநெல்வேலியில் உள்ள அச்சுத் தொழில் சங்கத்தினரிடமிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டதாக தெரிகிறது. அப்படி கோரிக்கைகள் வந்தபிறகும், பரிசீலனை என்ற பெயரால் அரசு இதில் காலதாமதம் செய்து வருகிறது. இந்தக் காலதாமதத்தை தவிர்த்து சீக்கிரமாக இதில் ஒரு முடிவைக் கண்டு அதனை அறிவிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது ஏதாவது கோரிக்கைகளை அனுப்பிக்கொண்டு தான் இருப்பார்கள். ஆனால் நான் சொன்னது, அரசு அந்தக் கோரிக்கைகளுக்காக காத்துக்கொண்டிருக்காமல், அதன் குறிப்பிட்ட காலம் ஆனவுடன், தாமாகவே உத்தரவை இட்டுவிடுகிறது என்பதுதான். சில தொழிற்சங்கங்கள் 2 வருஷத்தில், 3 வருஷத்தில் என்று அவர்கள் விருப்பப்படி கோரிக்கை அனுப்புவார்கள். அப்படி அரசு கொடுத்த பிறகு, இது எல்லாம் தங்கள் முயற்சியில்தான் வந்தது என்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், கோரிக்கைகளுக்காக காத்துக் கொண்டிராமல், எங்கே எவ்வப்போது தேவைப்படுகிறது என்று பார்த்து, அதற்கான குழுக்களை அமைத்து வருகிறோம்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தாமாகவே அரசு இந்தக் காரியங்களைச் செய்கிறது என்று சொன்னார்கள். அவர்களை நான் கேட்க விரும்புவது எல்லாம், தமிழ்நாட்டிலே 10 ரூபாய், 20 ரூபாய் என்று சம்பளம் பெற்றுக்கொண்டு, பலகாலமாக சித்திரவதை

1982 மார்ச் 1]

களை இந்த அச்சுத் தொழிலாளர்கள் அனுபவித்து வருகிறார்களே, ஆகவே அதை உடனடியாக களையும் பொருட்டு, குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள்ளாக இந்த சம்பள நிர்ணயத்தைச் செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1—5—1978–லே அரசு நிர்ணயம் செய்திருக்கிறது தற்போது 80-ம் 81ம் முடிந்துவிட்டதாகையால் உடனேயே கமிஷனருக்கு அது பற்றி குறிப்பு அனுப்பி, ஊதிய நிர்ணயக் குழுவிற்கு யார் யாருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கலாம் என்று கேட்டிருக்கிறோம். அவர்கள் எந்தெந்த இடங்களில் எந்தெந்த தொழிற்சங்கங்கள் அதிக பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்ற விவரங்கள் அனுப்புவார்கள். அதைப் பரிசீலனை செய்து, மற்ற அம்சங்களையும் ஆலோசித்து குழுவை அமைக்கவிருக்கிறோம். அந்த குழுவினர் இதில் விரைவில் பணியாற்றுவார்களேயானால் அவர்களுக்கும் பெருமை, அரசும் விரைவிலே அதில் முடிவெடுக்க உதவியாக இருக்கும்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 294—திரு. ரா. கு. **பெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஊரில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) நெல்லை மாவடடம் ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதியதாக ஒரு கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் துவங்க அரசு 15—12—1981 ல் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அச்சங்கம் ஒட்டப்பிடாரத்தில் அமைக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரத்தில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தை அமைக்கவிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதை இந்த ஆண்டே துவங்க அரசு ஆணைபிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.